விரும்புகின்றேன். அதைப் பரிசீலனை செய்தாவது குடிநீர்த் திட்டங்கள் பாதிக்கப்படாமல்—அந்தப் பகுதிகளை வைத்துத் தான் கல்பாக்கத்திற்கும், திருக்கழுக்குன்றத்திற்கும், பூதூரிலிருந்து அச்சரப்பாக்கம், மேல்மருவத்தூர், மதுராந்தகம் போன்ற கிராமங்களுக்கும் குடிநீர் வழங்குவதற்குத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதைக் கருத்தில் கொண்டு அரசு அதைத் தடை செய்யுமா? அந்தப் பகுதியில் மணல் எடுப்பதையே தடை செய்யுமா, ரத்து செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பொதுவாகவே, மணல் எடுப்பதை எப்படி ஒரு வரைமுறைப்படுத்தலாம் என்று இந்த அரசு யோசித்துக் கொண்டு, சில சட்டங்களைக் கொண்டு வர இருக்கிறது. அந்தச் சட்டத்திற்குள் இந்தக் குறிப்பிட்ட இடத்தையும் அடக்க அரசு முயற்சி செய்யும்.

## 2. அறிக்கை அளித்தல்.

### பொதுக் கணக்குக் குழு

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989–90 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தி ஆறு முதல் இருபத்தொன்பது வரையிலான (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 3. இறுதித் துணை நிதி நிலை அறிக்கை, 1989-90—அளித்தல்.

மாண்புமிகு டாக்டர். மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1989–90ஆம் ஆண்டுக்குரிய இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன். இந்த மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூ. 654.01 கோடி வருவாய்க் கணக்கிலும், ரூ. 959.45 கோடி மூலதனக் கணக்கிலும் வருகின்றது.

2. இப்பொழுது வைக்கப்பட்டுள்ள இந்த இறுதித் துணை மதிப்பீடுகளில் கோரப்பட்டுள்ள மொத்தத் தொகையில் ரூ. 815.09 கோடி, நடப்பாண்டில் இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து பெறப்பட்ட வழிவகை முன்பணங்கள் மற்றும் மிகைப்பற்றுகளைத் திருப்பிக் கொடுக்கத் தேவைப்படுகிறது. இந்த மானியக் கோரிக்கை அனுமதிக்கப்படுவதால், தேவைக்கேற்ப இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து வழிவகை முன்பணம் மற்றும் மிகைப் பற்றுக்கள் பெற ஏதுவாக இருக்கும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS